# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

Vol: 01 | Issue: 289 | 4 Pages | 22.5.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 289 | 4 பக்கங்கள் | 22.5.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## உடலில் 6 நிப்பிள்கள் கொண்ட வினோத மனிதன்.. காரணம் இதுதான்



அமெரிக்கா, மே. 22

அமெரிக்காவில் உள்ள நபர் ஒருவர்தனதுஉடலில்அறுவை சிகிச்சை மூலம் கூடுதலாக 4 முலைக்காம்புகளை (Nipple) சேர்த்துக் கொண்டுள்ள சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஹாரி ஹஃப்க்ளோப்பன் என்ற அந்த நபருக்குத் தனது உடம்பில் கூடுதலாக நிப்பிள்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற வினோத ஆசை ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என அவர் செயற்கை முறையில் உடலில் மாற்றம் செய்யும் நிபுணரான ஸ்டீவ் ஹாவொர்த்தை அணுகியுள்ளார். அதன்படி ஸ்டீவ் இயற்கையான ஆண் நிப்பிள்களைப் போலவே தோற்றமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நான்கு சிலிகான் நிப்பிள்களை ஹாரியின் உடம்பில் பொருத்தியுள்ளார்.

அதன்பின் அறுவை சிகிச்சை காயங்கள் குணமடைந்த பின் கொலராடோவைச் சேர்ந்த டாட்டூ கலைஞர் ஏஞ்சல் என்பவரிடம் சென்ற ஹாரி, தனது உடம்பில் புதிதாக பொறுத்தப்படுத்த சிலிகான் நிப்பில்கள் இயற்கையாகத் தோன்றும் வகையில் பச்சை குத்திக் கொண்டுள்ளார்.

ஹாரியின் வீடியோவை பகிர்ந்த டாட்டூ கலைஞர் ஏஞ்சல், இந்த செயல்முறை மிகவும் எளிதான, சிக்கலற்ற முறைதான் என்று விளக்கினார். இது வினோதமாகத் தோன்றினாலும் இந்த வகையிலான செயற்கை இம்பிளான்ட்கள் மற்றும் பச்சை குத்துதல் மூலமும் மூன்றாம் பாலினத்தவர்களான திருநங்கைகளுக்கு தங்களின் உடல் அடையாளத்தை வெளிப்படுத்திக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இருப்பினும் இயற்கைக்கு ஹாரியின் உடலில் கூடுதலாக உள்ள 4 நிப்பிள்கள் காண்போருக்கு உறுத்தலாகவே இருந்து வருகிறது.

## 1 லிட்டர் லெமன் ஜூஸை 13.64 வினாடிகளில் குடித்து கின்னஸ் சாதனை.. வைரல் வீடியோ



அமெரிக்கா, மே. 22

அமெரிக்காவின் இடாகோ மாகாணத்தைச் சேர்ந்த டேவிட் ரஷ் என்பவர் 13.64 வினாடிகளில் ஒரு லிட்டர்லெமன்ஜூஸை(எலுமிச்சை சாற்றை) குடித்து உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.இதற்கு முன்பு 16.5 வினாடிகளில் 1 லிட்டர் (4.2 கப்) லெமன் ஜூஸை 16.5 வினாடிகளில் வேகமாகக் குடித்தவர் என்ற பட்டத்தை டேவிட் தன்வசம் வைத்திருந்தார்.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தொடர் சாதனையாளர் ஆண்ட்ரே ஆர்டோல்ஃப் 16 வினாடிகளில் 1 லிட்டர் லெமன் ஜுஸை குடித்து டேவிட்டின் பட்டதைத் தட்டிச் சென்றார். அதை முறியடிக்கும் முயற்சியில் இறங்கிய டேவிட் தற்போது இந்த சாதனையைப் படைத்துள்ளார். 13.64 வினாடிகளில் 1 லிட்டர் லெமன் ஜூஸ் அருந்திய அனுபவம்குறித்துடேவிட்கூறுகையில்,இந்தஅனுபவம்இனிமையானதாக இல்லை என்றும் இதனால் கடுமையான வயிற்றுவலிக்கு ஆளானதாகவும் தெரிவித்தார்.

எப்போதும் புதுமையான விஷயங்களை முயற்சி டேவிட் பார்க்கும் இதுவரை 250க்கும் மேற்பட்ட கின்னஸ் உலக சாதனைகளை முறியடித்துள்ளார். மேலும் தற்போது அவர் நிகழ்த்திக்காட்டியுள்ள சாதனையையும் சேர்ந்து 165 பட்டங்களை டேவிட் ரஷ் தன்வசம் வைத்துள்ளார். உலகில் உள்ள எந்தவொருவரையும் விட அதிக சாதனைகளைச் செய்ய வேண்டும் என்பதையே டேவிட் தனது வாழ்நாள் இலக்காகக் கொண்டுள்ளார்.

## சொந்த நாடு திரும்பும் பிரச்சனையை எதிர்கொள்ளும் கனடாவில் படிக்கும் இந்திய மாணவர்கள்




கனடா, மே. 22

கனடா நாட்டில் இந்தியாவைச் சேர்ந்த பல மாணவர்கள் படித்து வருகிறார்கள். இதன் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. கனடாவில் உள்ள ஒரு மாகாணம் பிரின்ஸ் எட்வர்ட் ஐலேண்ட் (Prince Edward Island). இந்த மாகாணம் திடீரென குடியேற்ற விதிகளை மாற்றியுள்ளது.

இதன் காரணமாக இந்த மாகாணத்தில் படித்து வரும் இந்தியாவைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள், இந்தியாவுக்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்திய மாணவர்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக கூறப்படுகிறது. இது தற்போதும், இதுவரையும் இல்லாத சூழ்நிலையாக உள்ளது என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை மந்திரி கூறும்போது "ஏராளமான இந்திய மாணவர்கள் கனடா சென்று படித்து வருகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறிப்பிடத்தகுந்த வகையிலானது. ஆனால், ஏராளமான மாணவர்கள் இந்தியாவிற்கு திரும்பும் சூழ்நிலையை எதிர்கொண்டு வருவதாக எங்களுக்கு தகவல் கிடைக்கவில்லை.

இதுகுறித்து எங்களுக்கு எந்த தகவலம் வரவில்லை. இங்கொன்று, அங்கொன்று என இருக்கலாம். கனடாவில் இருக்கும் மாணவர்கள் மிகப்பெரிய பிரச்சனையை எதிர்கொள்வதாக நாங்கள் பார்க்கவில்லை" எனத் தெரிவித்துள்ளது.

இந்தியாவால் தடைசெய்யப்பட்ட காலிஸ்தான் குழுவின் செயல்பாடு கனடாவில் அதிகமாக உள்ளது. அதை கட்டுப்படுத்த வேண்டும் என இந்தியா தொடர்ந்து கனடாவை வலியுறுத்தி வருகிறது. காலிஸ்தான் தலைவர் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய விசாரணை அமைப்புகளுக்கு தொடர்பு இருப்பதாக கனடா குற்றம்சாட்டியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையில் நட்பில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜூன் இல்லை.. ஜூலைதான்.. ஆனால் பயங்கரமான சர்ப்ரைஸ்.. மகளிர் உரிமை தொகையில் ஜாக்பாட்

சென்னை, மே. 22

மகளிர் உரிமை தொகையில் புதிய பயனாளிகள்சேர்க்கும்முடிவுஜூலை மாதமே நடக்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

மகளிர் உரிமை தொகையில் புதிய விண்ணப்பதாரர்களை பெறுவதற்கான விண்ணப்பங்களை அச்சடிக்கும் முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. இந்த மாத இறுதியில் விண்ணப்பங்கள் அச்சடிக்கப்பட்டு பெண்களிடம் வழங்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஆனால் ஜூன் மாதம் புதிய பயனாளிகள் சேர்க்கப்பட வாய்ப்பு இல்லை. ஜூன் 4 வரை தேர்தல் விதிகள் உள்ளதால் புதிய லிஸ்ட் எடுக்க முடியாது. ஜூன் 4க்கு பின் லிஸ்ட் எடுத்தால் குறைந்தது 2 வாரங்கள் தேவைப்படும். அப்படி லிஸ்ட் எடுக்கும் பட்சத்தில் ஜூன் 15ம் தேதிக்குள் புதிய நபர்களுக்கு பணம் போட முடியாது.

இதனால் இந்த திட்டத்தில் புதிதாக சேர்க்கப்படுபவர்களுக்கு ஜூன் 15க்கு பதில் ஜூலை 15ம் தேதியே பணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் கலைஞர் மகளிர் உரிமை தொகையில் தமிழ்நாட்டில் கூடுதலாக 2.30 லட்சம் பேர் இணைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்வெளியாகிஉள்ளது.கலைஞர் மகளிர் உரிமை திட்டம் விரைவில் மேலும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இந்த முறை இதில் கூடுதல் பயனாளிகள் சேர்க்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன்படி முன்பு முன்னாள் அரசு ஊழியர்களின் மனைவிகளுக்கு பணம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு இந்த முறை பணம் கொடுக்க திட்டமிடப்பட்டு உள்ளது. அதேபோல்முன்னாள்கார்ப்பரேஷன் ஊழியர்களின் மனைவிகளுக்கும் பணம் கொடுக்க ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

திட்டத்தின் பின்னணி: கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டது. குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்பதாகும்.

பெரும்பாலும் கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரித்திடவே பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கி, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இட ஒதுக்கீடு அளித்து பெண் உரிமை போற்றிட, கலைஞர் அவர்களின் பெயரால் இந்த மகளிர் உரிமைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல்'மகளிர்உரிமைத்தொகை' என்று கவனத்துடன் பெயரிடப்பட்டு உள்ளது.

எப்போது: இந்த திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளை சேர்க்க விண்ணப்பங்கள் ஜூன் இரண்டாம் வாரம் வழங்கப்பட உள்ளது. ஜூன் 4ம் தேதி ரிசல்ட் வந்த பின் தேர்தல் விதிகள் தளரும். அதனால் அதற்கு பின்பே விண்ணப்பங்களை கொடுக்க முடியும்.அதற்குபின்பேவிண்ணப்பம் கொடுக்கப்படும்.

இந்த திட்டத்தில் கடந்த ஜனவரி கூடுதல் பயனாளிகள் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில் இந்த மாதம் இதே திட்டம் மறுவாழ்வு முகாம் பெண்களுக்கும் விரிவுபடுத்தபட்டுள்ளது. அதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது,. அதேபோல் இதுவரைன் விடுபட்ட பெண்களுக்கும் பணம் அனுப்பப்பட முடிவு செய்யப்பட்டு உள்ளது.

யாருக்கெல்லாம் வழங்கப்படும்: அதன்படி பின்வரும் மக்களுக்கு இந்த திட்டம் விரிவுபடுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

1. முன்னாள் அரசு ஊழியர்களின் மனைவிகளுக்கு பணம் வழங்கப்படலாம்.

2, முன்னாள் கார்ப்பரேஷன் ஊழியர்களின் மனைவிகளுக்கு பணம் வழங்கப்படலாம்.

3. புதிதாக ரேஷன் கார்டு பெற்றவர்களுக்கு பணம் வழங்கப்படலாம்.

4. புதிதாக திருமணம் ஆன பெண்களுக்கு பணம் வழங்கப்படலாம்.

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில், கடந்த ஜனவரி மாதம் கூடுதல் பயனாளிகள் சேர்க்கப்பட்ட நிலையில், 90 சதவீத மகளிருக்கு உரிமைத்தொகை சென்று சேர்ந்துவிட்டது என்றும், தகுதியான ஒருசிலர் விடுபட்டு இருந்தால் அந்த பட்டியலை மாவட்ட ஆட்சியரிடம் வழங்க திமுகவினருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். தேர்தலுக்கு பின் இவர்களுக்கும் பணம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திமுக பிளான்: ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி மாதம் மேலும் சில பயனாளிகளுக்கு பணம் அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்தான் இந்த திட்டத்தில் மீண்டும் சேர 11.8 லட்சம் பேர் மறு விண்ணப்பம் கொடுத்துள்ளனர். அக்டோபர் இறுதிவரை இவர்கள் கொடுத்தனர். இப்போது 1.7 கோடி பேருக்கு இந்த பணம் தற்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

## அதிமுகவுக்குள் பிளவா? எடப்பாடியையும் என்னையும் பிரிக்க முடியாது: எஸ்பி வேலுமணி பரபரப்பு விளக்கம்

கோவை, மே. 22

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் எனக்கும் இடையே எந்தக் குழப்பமும் இல்லை என அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி விளக்கம் அளித்துள்ளார்.

அதிமுக முன்னாள் எம்.எல்.ஏவும், கோவை மாநகர முன்னாள் மேயருமான மலரவன் கடந்த சனிக்கிழமை காலமான நிலையில், அஞ்சலி செலுத்த நேரில் வந்திருந்தார் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி. அப்போது அவருடன் அதிமுக எம்.எல்.ஏக்கள் சிலரும் இருந்தனர். ஆனால், அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி எடப்பாடி பழனிசாமியுடன் வரவில்லை.

இதையடுத்து ஒரு தகவல் அரசியல் வட்டாரத்தில் தீயாகப் பரவியது. கடந்த சில நாட்களாக எஸ்.பி.வேலுமணி எடப்பாடி பழனிசாமியுடன் கருத்து வேறுபாட்டில் இருப்பதாக தகவல்கள் பரவின. இது அதிமுகவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் இன்று கோவை விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய எடப்பாடி பழனிசாமியை, எஸ்.பி.வேலுமணி நேரில் சென்று வழியனுப்பி வைத்தார்.



வேலுமணி பேட்டி: பின்னர் கோவை விமான நிலையத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், “தேர்தல் விதிமுறை அமலில் இருப்பதால் அதிகமாக பத்திரிகையாளர்களைச் சந்திக்க முடியவில்லை. சென்னை சென்ற எடப்பாடியாரை வழியனுப்ப வந்தோம்.

கோவை மாவட்டம் உட்பட தமிழகம் முழுவதும் மழை பெய்கிறது. இருந்தாலும் குடிநீர் பிரச்சனை இருக்கிறது. கோவை மாவட்டத்தில் அதிமுக கொண்டு வந்த திட்டங்கள்தான் இன்னமும் செயல்பாட்டில் இருக்கின்றது. சீரான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.” என்றார்.

சட்ட விரோதமாக வெளிநாட்டு நிதியை பெற்ற ஆம் ஆத்மி.. தேர்தல் நெருங்கும் நேரத்தில் ED பரபர குற்றச்சாட்டுசட்ட விரோதமாக வெளிநாட்டு நிதியை பெற்ற ஆம் ஆத்மி.. தேர்தல் நெருங்கும் நேரத்தில் ED பரபர குற்றச்சாட்டு

தவறான தகவல் பரப்பப்படுகிறது: மேலும் பேசிய வேலுமணி, “பல ஊடகங்கள் தவறான செய்தியை பரப்புகின்றன. பல சோதனைகளைக் கடந்து கட்சியையும், ஆட்சியையும் காப்பாற்றியவர் எடப்பாடி பழனிசாமி. எடப்பாடி பழனிசாமி அற்புதமாக கூட்டணி வைத்தார். அவரை போல எந்த தலைவரும் பிரச்சாரம் செய்யவில்லை. அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அவ்வளவு கூட்டம் கூடியது. தேர்தலில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான கூட்டணி வெற்றி பெறப் போகிறது.

சிறப்பான முறையில் எடப்பாடியார் ஆட்சி நடத்தினார், தமிழக மக்கள் மீண்டும் எடப்பாடி முதல்வராக வேண்டும் என நினைக்கின்றனர். அப்படி ஒரு சூழ்நிலை இருக்கும் போது தவறான விஷயத்தை பரப்புகிறார்கள். அதிமுக எதிர்க்கட்சியாக ஆனபின்னரும் ஒருசிலரின் அஜெண்டாவை பின்பற்றி எங்களுக்குள் பிளவு என எழுதுகின்றனர். எங்களுக்குள் எந்த குழப்பமும் கிடையாது. கட்சிக்குள் என்ன பிரச்சனை என்றாலும் அனைத்து மூத்த நிர்வாகிகளிடமும் ஆலோசித்த பின்பு தான் எடப்பாடி பழனிசாமி எந்த முடிவையும் எடுப்பார். அதிமுகவில் உட்கட்சி பூசல் இருப்பதாக தவறான ஒரு பிம்பத்தை உருவாக்கவே பார்க்கின்றனர். திமுக மற்றும் இன்ன பிற கட்சிகளின் தூண்டுதல்களில் நடக்கிறது.” எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஓபிஎஸ் சசிகலா இணைப்பு சாத்தியமில்லை. அதிமுகவில் ஓபிஎஸ், சசிகலா ஆகியோரை சேர்ப்பது போல வெறும் பிம்பத்தை ஏற்படுத்துகின்றனர் என்றார் எஸ்.பி.வேலுமணி. அப்போது ஓபிஎஸ் ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்தை சந்தித்தீர்களா என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். ஆனால் அந்த கேள்விக்கு பதில் அளிக்காமல் எஸ்.பி வேலுமணி அங்கிருந்து நகர்ந்து சென்றார்.

## நெல்லையில் ரவுடி கொலை: 6 தனிப்படைகள் அமைப்பு

நெல்லை, மே.22

நெல்லை மாவட்டம் மூன்றடைப்பு அருகே உள்ள வாகைகுளம் பகுதியை சோ்ந்தவர் சிவகுருமுத்துசாமி. இவருடைய மகன் தீபக் ராஜா (வயது 30). இவர் நேற்று மதியம் 2 மணி அளவில் தனது நண்பர்களுடன் நெல்லை திருச்செந்தூர் ரோட்டில் பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் அருகே உள்ள ஒரு ஓட்டலுக்கு சாப்பிட வந்தார்.

அங்கு அவர் சாப்பிட்டுவிட்டு ஓட்டலுக்கு வெளியே வந்தார். அப்போது அரிவாள், கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் முககவசம் அணிந்து பதுங்கி இருந்த 6 பேர் கும்பல் அவரை நோக்கி ஓடி வந்தது.

இதை பார்த்த அவர் மீண்டும் ஓட்டலுக்குள் ஓடி வர முயன்றார். ஆனால் அவரை ஓடஓட விரட்டிச்சென்ற மர்மகும்பல் கண் இமைக்கும் நேரத்தில் தீபக் ராஜாவின் முகத்தை அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இந்த வெறிச்செயலில் ஈடுபட்ட அவர்கள் அங்கு நிறுத்தி இருந்த காரில் ஏறி தப்பிச்சென்றனர். இதில் தீபக் ராஜா சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து காரில் தப்பிச்சென்ற 6 பேர் கும்பலை வலைவீசி தேடி வருகின்றனர்.

இந்நிலையில்ரவுடிதீபக்ராஜாகொலைசெய்யப்பட்டசம்பவம்தொடர்பாக6தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.தீபக்ராஜாவின்அண்ணன்முத்துகுமார்புகாரில்,மர்மநபர்கள்கொலை செய்ததாக போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கொலைசெய்யப்பட்டதீபக்ராஜாவுடன்உணவருந்தியநபர்கள்உள்பட3பேரிடம்போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.


SSR TEX

TEXTILE WASTE MANAGEMENT COMPANY

ஆட்கள் தேவை

* ஹெவி டிரைவர் * லோடு மேன்
* கட்டிங் வேஸ்ட் தரம் பிரிக்க பெண்கள் 100 பேர் தேவை
* சூப்பர்வைசர்

10,000 முதல் 22,000 வரை மாத சம்பளம்

கேண்டீன் வசதி உண்டு

கட்டிங் வேஸ்ட் தரம் பிரிக்க தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

5B/20-1 பாரதி நகர் மெயின் ரோடு, ஓம் சக்தி பேக்கரி, கவுண்டநாயக்கன்பாளையம், பாரதி நகர், திருப்பூர் 641 607

04217156444 / 72005 34401 / 63810 67524

# மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் அருவிகளில் குளிக்க வேண்டாம்: பேரிடர் மேலாண்மை துறை எச்சரிக்கை

சென்னை, மே.22

தமிழகத்தில் 4 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 8 மாவட்டங்களில்பேரிடர்மீட்புப் படை உஷார்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வருவாய் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கன மழை காரணமாக திடீர் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆறு மற்றும் அருவிகளில் குளிக்க வேண்டாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவை அன்னூரில் பா.ஜ.க பிரமுகர் வீட்டில் 1½ கோடி திருடிய வாலிபர் சிக்கினார்: ரகசிய இடத்தில் விசாரணை

மேட்டுப்பாளையம், மே.22

கோவை மாவட்டம் அன்னூர் அருகே உள்ளது சொக்கம்பாளையத்தை சேர்ந்த விஜயகுமார். பா.ஜ.க. முன்னாள் ஒன்றிய தலைவர்.

கடந்த 17ந் தேதி விஜயகுமாரும்,அவரதுமனைவி ரேணுகா தேவியும் வீட்டை பூட்டிவிட்டு வெளியில் சென்றிருந்தனர். இந்த சமயத்தில் மர்ம நபர்கள் சிலர் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்து, பீரோவில் வைத்திருந்த 1½ கோடி பணம், 9 பவுன் நகைகளை கொள்ளை யடித்து சென்றனர்.

இதுதொடர்பாக அன்னூர்போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். தனிப்படை மேலும் கொள்ளையில் ஈடுபட்டவர்களை பிடிக்க கோவை மாவட்ட போலீஸ்சூப்பிரண்டு பத்ரி நாராயணன் உத்தரவின் பேரில் டி.எஸ்.பி. பாலாஜி தலைமையில் இன்ஸ்பெக்டர் நித்யா மற்றும் போலீசார் அடங்கிய 7 தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படை போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வந்தனர். பணத்தை பறிகொடுத்த விஜயகுமார் அவரது மனைவி ரேணுகாதேவி மற்றும் சிலரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். மேலும் வீட்டின் அருகில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் அன்று பதிவாகி இருந்த காட்சிகளை தனிப்படை போலீசார் ஆய்வு செய்து விசாரணை நடத்தினர்.

அதன் அடிப்படையில் 10 பேரிடம் விசாரணை நடந்தது. இதில் சந்தேகத்துக்கிடமான நபர்களை போலீசார் தங்களது விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்து துருவி, துருவி விசாரணை நடத்தினர். இதில் முக்கியதகவல்கள் தனிப்படை போலீசருக்கு கிடைத்தன.

இதற்கிடையே போலீசார் இந்த வழக்கில் வாலிபர் ஒருவரை பிடித்து, ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் குறித்த தகவல்கள், அதை பதுக்கி வைத்த இடம், எதற்காக கொள்ளையடித்தார் என்பன உள்பட பல்வேறு கேள்விகளைகேட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையின் முடிவில் பல்வேறு பரபரப்பு தகவல்கள் வெளியாகும் என கூறப்படுகிறது.

# இன்று வைகாசி விசாக திருவிழா: திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்



திருச்செந்தூர், மே. 22

முகப்பெருமானின்அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் வைகாசி விசாக திருவிழாவும் ஒன்று. இந்தாண்டு திருவிழா நாளை (புதன்கிழமை)வெகுவிமர்சையாக நடைபெறுகிறது.

முருகப்பெருமான் அவதரித்த வைகாசி விசாக தினமான நாளை நடைபெறும் விசாக திருவிழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தால் ஒரு வருடம் அதாவது 12 மாதம், மாத கடைசியில் வரும் மாதாந்திர வெள்ளிக்கிழமை தரிசனம் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

அந்த வகையில் நாளை நடைபெறும் விசாகத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்ய மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள்பாதயாத்திரையாகவும், வாகனங்களிலும் வந்தவாறு உள்ளனர். ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்தும், அலகு குத்தியும் வந்து கடலில் புனித நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விசாக திருவிழாவை முன்னிட்டு (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 3 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 5மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம்,காலை 10.30 மணிக்கு உச்சிகால அபிஷேகம் நடைபெற்றது.

மாலை 4மணிக்கு சாயரட்சை தீபாராதனையும், இரவு 7.15மணிக்கு இராக்கால அபிஷேகமும் நடக்கிறது. விசாக திருவிழாவான இன்று (புதன்கிழமை)அதிகாலை 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 4மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம்,காலை 10.30 மணிக்கு உச்சி கால அபிஷேகம், மாலை 4மணிக்கு சாயரட்சைதீபாராதனை நடக்கிறது.

தொடர்ந்து சுவாமி ஜெயந்தி நாதர்வசந்த மண்டபத்தில் எழுந்தருளி அங்கு முனி குமாரர்களுக்கு சாப விமோசனம் கொடுக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு 7.15 மணிக்கு இராக் கால அபிஷேகம் நடக்கிறது.

நாளை மறுநாள் (வியாழக் கிழமை) வழக்கம் போல் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு 4.30 விஸ்வரூபதரிசனம், 5 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# செஞ்சியில் முன்னால் பிரதமர் ராஜீவ் காந்தியின் 33 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு



விழுப்புரம், மே.22

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நான்கு முனை சந்திப்பில் முன்னால் பிரதமர் ராஜீவ் காந்தியின் 33 ஆம் ஆண்டு நினைவு தினம் செஞ்சி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சூரிய மூர்த்தி தலைமையில் அனுசரிக்கப்பட்டது இதில் ராஜீவ் காந்தியின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது உடன் மூத்த காங்கிரஸ் தலைவர் பொன்பத்தி சீனுவாசன் செஞ்சி பழனிவேல் மகிளாகாங்கிரஸ்மாவட்ட தலைவி ஜெயசுதா, செஞ்சி தொகுதி ஊடகப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் செஞ்சி R ஷப்பீர் ஷெரீஃப் சான்பாஷா, முனுசாமி, சேகர், மொடையூர் கண்ணன், மகிளா காங்கிரஸ் மாவட்ட செயலாளர்கெங்கலஷ்மி, மற்றும் பல காங்கிரஸ் நிர்வாகிகள்மற்றும்பொது மக்கள் கலந்து கொண்டனர்...

# அடிப்படை வசதி இல்லாததால் பெண் தரக்கூட தயக்கம்: குமுறும் கிராம மக்கள்



கடலூர், மே. 22

இன்றைய கால கட்டத்தில் நிலவுக்கு சென்று வரும் நிலைக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. ஆனால், கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சின்னகாரமேடு கிராமம், வளர்ச்சியின்றி பின்தங்கியுள்ளதாக குமுறுகின்றனர் ஊர் மக்கள்.

கிராமத்தில் சுமார் 120 குடும்பம் வசிக்கின்றன. கிராம மக்கள் சொல்லும் சொல் கேட்டால் எங்கள் கிராமத்தில் வாழ எங்களுக்கு உகந்த இடமில்லை என குற்றஞ்சாட்டுகின்றனர்.

காரணம் என்னவென்றால், குடிக்க நீரின்றி தவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு மற்ற கிராமங்களில் உள்ள சாலை வசதி, போக்குவரத்து வசதி, நியாய விலைக் கடை கூட இல்லை என குமுறல் சத்தம் அதிகாரிகளுக்கு கேட்காமல், அங்குள்ள மக்களின் காதுகளுக்கு மட்டுமே கேட்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

எனவே தொழில் நுட்ப ரீதியாக உலகம் முன்னேறி வரும் காலத்தில்.. தங்கள் ஊரே ஒட்டு மொத்தமாக புறக்கணிக்கப்படுவதாக சின்னக்காரமேடு கிராம மக்கள் புலம்புகின்றனர்.

அடிப்படை வசதிகள் கூட இல்லாத கிராமம் என்பதால் பெண் தரக்கூட தயங்குவதாக நொந்துபோய் உள்ளனர் சின்னகாரமேடு கிராம மக்கள்.

# 47வது கோடை விழா மலர் கண்காட்சி இன்று தொடக்கம் சுற்றுலா பயணிகளை வரவேற்க தயாரான ஏற்காடு



சேலம்: மே. 23

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் கோடை விழா மற்றும் மலர்கண்காட்சி இன்று (புதன்கிழமை) தொடங்கி 26ந் தேதி வரை 5 நாட்கள் நடை பெறுகிறது.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் அண்ணா பூங்காவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 7 லட்சத்திற்கும் மேற்பட்டமலர்களைகொண்டு இயற்கை வளங்கள் மூலம் மின்சாரம் உருவாக்குவதை எடுத்துரைக்கும் வகையில் பிரமாண்ட காற்றாலை, சுற்றுச்சூழலில் கடல் வாழ் உயிரினங்களின் பங்கினை உணர்த்தும் வகையில் பவளப்பறைகள், நண்டு, சிற்பி, ஆக்டோபஸ், நட்சத்திர மீன்,கடல்குதிரைபோன்ற உருவங்களும், குழந்தைகளிடம் மரம் நடுதலை ஊக்குவிக்கும் வகையில் கார்ட்டூன் கதாப்பாத்திரங்களான டொனால்டு டக், மிக்கிமவுஸ், டாம் அண்டு ஜெரி மரங்களை நடுவது போலவும், நீர் பாய்ச்சுதல் போலவும் காட்சிப்படுத்தப்பட உள்ளது. மேலும் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வண்ண மலர் தொட்டிகளைக் கொண்டு மலர்க்காட்சி அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், அண்ணா பூங்காவளாகம்முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரித்திடவும், ஏரி பூங்கா உள்ளிட்ட பல்வேறுஇடங்களில்வண்ண மலர்களால் ஆன செல்பி பாயிண்டுகளும் அமைக்கப்பட உள்ளன. அண்ணா பூங்காவில் பழங்கள் மற்றும் காய்கறிகளை கொண்டு பல்வேறு வடிவ அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அண்ணா பூங்காவில், ஏற்காட்டில் விளையும் காப்பி ரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை தேவைக் கேற்ப சுவைத்து அந்த காப்பிரகங்களை வாங்கி செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையின் சார்பில் ஏற்காடு படகு இல்லத்தில் நாளை காலை 10 மணி முதல் 12 மணி வரை பொதுமக்களுக்கான படகு போட்டியும், சமூக நலத்துறையின் சார்பில் 23ந் தேதி அன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை பொதுமக்களுக்கான அடுப்பிலா சமையல் போட்டி யும், விளையாட்டுத்துறையின் சார்பில் 23ந் தேதி அன்று மான்போர்ட் விளையாட்டு மைதானத்தில் காலை 10 மணி முதல் 12 மணி வரை ஆண்களுக்கான கால்பந்து போட்டி, பெண்களுக்கான பந்து வீசுதல் போட்டி, 50 மீட்டர் ஓட்டம், குண்டு எறிதல், நின்று நிலை தாண்டுதல், கயிறு இழுத்தல் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 25ந் தேதி காலை 10 மணி முதல் 12 மணி வரை நாய்கள் கண்காட்சியும், சமூக நலத்துறையின் சார்பில் 26ந் தேதி காலை 10 மணி முதல் 12 மணி வரை குழந்தைகளின்தளிர்நடை போட்டியும் நடத்தப்படவுள்ளது. சுற்றுலாத்துறை மற்றும் கலைப்பண்பாட்டுத்துறையின் சார்பில் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் கொம்பு இசை, சிலம்பாட்டம், பறை இசை, மாடுஆட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, பரத நாட்டிய நிகழ்ச்சி, நாட்டுப்புறபாடல்கள், கரகாட்டம், பப்பட் ஷோ, கிராமிய கலைநிகழ்ச்சிகள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

# மாட்டு தொழுவங்களுக்கு லைசென்ஸ் கட்டாயம் சென்னை மாநகராட்சி



சென்னை, மே. 22

சமீபகாலமாகவே சென்னையில் சுற்றித்திரியும் நாய்களால், சிறுவர், சிறுமிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.. அதனால்தான், நாய்களை வளர்ப்பது குறித்த விதிமுறைகளை, சென்னை மாநகராட்சி வகுத்து வருகிறது. அத்துடன் சில கட்டுப்பாடுகளையும், அபராதங்களையும் அமல் படுத்தி உள்ளது.

அதுபோலவே, மாடுகள் விஷயத்திலும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..

இரவு நேரங்களில், சாலையின் நடுவில் படுத்து கிடக்கும் மாடுகளைக்கண்டு, கனரக வாகனங்கள் திடீரென பிரேக் அடிப்பது. பக்கவாட்டில் செல்வது போன்ற காரணங்களாலும் விபத்துகள் நடக்கின்றன. அதே போல, பள்ளி, கல்லூரிக்கு செல்வோரும், வேலைக்கு செல்வோரும் பரபரப்புடன் செல்லும் போது, கால்நடைகள் சாலைகளை ஆக்கிரமித்தபடி வலம் வருகின்றன. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் சில நேரம் விபத்துகளும் ஏற்படுகின்றன.

இதனால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளால் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அதனால் தான், கால்நடைகளை வளர்ப்பவர்களை மாடுகளை உரிய கவனத்துடன் பராமரிக்குமாறு மாநகராட்சி வலியுறுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னையில் மாட்டு தொழுவங்களுக்கு லைசென்ஸ் கட்டாயம் என்ற புதிய விதி ஜூன் முதல் அமலுக்கு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் சாலைகளில் மாடுகளும் சுற்றித்திரிவதால் பொது மக்கள், வாகன ஓட்டிகளை மாடுகள் முட்டி அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன. போதிய இடமும், தொழுவமும் இல்லாமல்வளர்ப்பதால்தான், இப்படி தெருக்களிலும் சாலைகளிலும் சுற்றித்திரிய நேரிடுகிறது. ஆதலால் மாட்டு உரிமையாளர்கள் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் விண்ணப்பித்து உரிமம் பெறலாம்.

# 55 குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் வழங்க உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு



மதுரை, மே. 22

மதுரையில் உள்ள மழலை இல்லம் சார்பில் தொடரப்பட்ட வழக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி,

மதுரையில் அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் தத்தெடுப்பு மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் வழங்கலாம்.

மதுரை மாநகராட்சியின் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலர் எவ்விதமான தாமதமும் இன்றி 55 குழந்தைகளுக்கான பிறப்பு சான்றிதழை வழங்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் தத்தெடுப்பு மையங்கள் முறையாக ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நிலையில், சான்றிதழை வழங்க வேண்டும்.

சிறார் நீதிச்சட்டம், அவர்களின் பாதுகாப்பையும், உரிமையும் உறுதி செய்வதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் தத்தெடுப்பு மையத்திற்கு சான்றுகளை வழங்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களின் பிரச்சனைகள் குறித்து முதல்வருக்கு எந்த சிந்தனையும் இல்லை: அண்ணாமலை குற்றச்சாட்டு



சென்னை, மே. 22

தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

காவிரி மேலாண்மை வாரியத்தின் தீர்ப்பை மீறி, கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசு, இடுக்கி மாவட்டம், தேவிகுளம் தாலுகாவில் உள்ள பெருகுடா என்ற இடத்தில், சிலந்தி ஆற்றின் குறுக்கே அணை கட்டிக் கொண்டிருக்கிறது.

இதனால், அமராவதி அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து, தமிழக விவசாயிகள் பெரிதளவில் பாதிப்புக்குள்ளாவார்கள். ஆனால், தமிழக விவசாயிகளைக் குறித்து எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கிறது திமுக அரசு.

ஒரு புறம், கர்நாடக மாநில காங்கிரஸ் அரசு, மேகதாது அணையை நிச்சயம் கட்டுவோம் என்று கூறியதையும், முதலமைச்சர் ஸ்டாலின் கண்டிக்கவில்லை. பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு தடுப்பணை கட்டுவதையும் தடுக்கவில்லை. தங்கள் சந்தர்ப்பவாத இந்தி கூட்டணியின் நலனுக்காக, தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனையும், உரிமைகளையும் அடகு வைக்க, திமுக எப்போதும் தயங்கியதே இல்லை.

ஒவ்வொரு ஆண்டும், காவிரி நீர் மற்றும் மழை நீர் அனைத்தும் தடுப்பணை இன்றி கடலில் கலந்து வீணாகிக் கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடன், 1,000 தடுப்பணைகள் கட்டுவோம் என்று வெற்று வாக்குறுதி கொடுத்த திமுக, கடந்த மூன்று ஆண்டு கால ஆட்சியில், ஒரு செங்கல்லைக் கூட எடுத்து வைக்கவில்லை. உண்மையில், கோபாலபுரக் குடும்பத்தின் நலனைத் தவிர, பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின்.

உடனடியாக, கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசைக் கண்டித்து, சிலந்தி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணை கட்டுமானத்தை நிறுத்த வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# அருவிகளில் குளிக்க வேண்டாம் பேரிடர் மேலாண்மை துறை எச்சரிக்கை



சென்னை, மே.22

தமிழகத்தில் 4 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 8 மாவட்டங்களில் பேரிடர் மீட்புப்படை உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வருவாய் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை காரணமாக திடீர் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆறு மற்றும் அருவிகளில் குளிக்க வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தடை காலம் எதிரொலி: மீன் விலை 2 மடங்கு அதிகரிப்பு

ராயபுரம், மே.22

தமிழகத்தில் தற்போது மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளது. இதனால் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும் விசைப்படகு மீனவர்கள் கடலுக்குள் செல்வதில்லை. குறைந்ததூரத்தில் மட்டும் பைபர் படகில் சென்று மீனவர்கள் மீன்பிடித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் மீன்பிடி தடைக்காலம் என்பதால் காசிமேடு மார்க்கெட்டுக்கு மீன்கள் வரத்து குறைவாகவே உள்ளது. பெரிய வகை மீன்கள் வருவதில்லை. இதனால் மீன் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது. வார இறுதி நாளான நேற்று காசிமேட்டில் மீன்விலை வழக்கத்தைவிட 2 மடங்கு அதிகமாக காணப்பட்டது. வஞ்சிரம் கிலோ ரூ.1400 வரையும், வவ்வால் மீன் ரூ. 750 வரையும் விற்கப்பட்டன. இதே போல் சிறியவகை மீன்களின் விலையும் அதிகமாக காணப்பட்டது. பெரியவகை மீன்கள் அதிகஅளவுவிற்பனைக்கு வரவில்லை. எனினும் விலையை பற்றி கவலைப் படாமல் மீன்பிரியர்கள் தங்களுக்கு பிடித்த மீன்களை வாங்கிச்சென்றனர்.

கோழி இறைச்சி விலையும் ரூ.20 அதிகரித்து உள்ளது. ஒரு கிலோ கோழி இறைச்சிரூ.280ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த வாரத்தில் ரூ.260 விற்கப்பட்ட நிலையில்தற்போது விலை உயர்ந்து இருக்கிறது.

காசிமேடு மார்க்கெட்டில் மீன்விலை விபரம் வருமாறு:

வஞ்சரம் ரூ.1400
சங்கரா ரூ.400
வவ்வால் ரூ.750
கொடுவா ரூ.600
நண்டு ரூ.350
காணங்கத்தை ரூ.200
ஷீலா ரூ.500
இறால் ரூ.400.

மீன்விலை உயர்வு குறித்து மீனவர்கள் கூறும்போது, மீன்பிடி தடைகாலம் அடுத்தமாதம் 14ந்தேதி வரை அமலில் உள்ளது. இதனால் காசிமேட்டில் மீன்கள் வரத்து குறைந்து உள்ளது. இந்த காலகட்டத்தில் கேரளாவில் இருந்து அதிக அளவில் மீன்கள் வரும். தற்போது மழை எச்சரிக்கையால் அங்கும் மீன்பிடிப்பது பாதிக்கப்பட்டு உள்ளதால் மீன்கள் வரத்து பாதியாக குறைந்து விட்டது. இதனால் மீன்விலை உயர்ந்து உள்ளது. மீன்பிடி தடைகாலம் முடியும் வரை விலை உயர்வு இருக்கும் என்றார்.

# 10 ஏக்கர் வாழை, கரும்பு பயிர்களை சேதப்படுத்திய மர்ம நபர்கள்

கடலூர், மே. 22

கடலூர் அடுத்த வெள்ளப்பாக்கம் பகுதியில் உள்ள 10 ஏக்கர் நிலத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சுசீலா தேவநாதன் உள்ளிட்ட 4 பேர் விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்த இடம் தொடர்பாக சுசீலா தேவநாதன் தரப்பினருக்கும், மற்றொரு தரப்பினருக்கும் கோர்ட்டில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இங்கு பயிரிடப்பட்ட வாழை மற்றும் கரும்பு பயிர்கள் மீது டிராக்டரால் உழவு செய்யப்பட்டிருந்தது. இதனை அவ்வழியே சென்றவர்கள் இன்று காலை பார்த்து, ஊராட்சி தலைவர் சுசீலாவிற்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் வந்து பார்த்த போது, வாழை மற்றும் கரும்பு பயிர்களை டிராக்டரை கொண்டு யாரோ அழிக்க முயற்சித்தது தெரிய வந்தது.


தொடர்ந்து ஊராட்சி தலைவர் சுசீலா தேவேந்திரன் மற்றும் அவரது தரப்பினர்வெள்ளகேட் பகுதிக்கு திரண்டு வந்தனர். பயிர்களை சேதப்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கடலூர் நெல்லிக்குப்பம் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கு ஆதரவாக அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் காசிநாதன், அழகானந்தம் ஆகியோரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இது பற்றி தகவல் அறிந்த பண்ருட்டி துணை போலீஸ் சூப்பிரண்டு பழனி, இன்ஸ்பெக்டர்கள் கண்ணன், பலராமன், சப்இன்ஸ்பெக்டர் ஜவ்வாது உசேன் ஆகியோர் விரைந்து வந்தனர். சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பயிர்களை சேதப்படுத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் உறுதி அளித்தனர்.

இதனையேற்ற ஊராட்சி தலைவர் மற்றும் அவரது தரப்பினர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் கடலூர்நெல்லிக்குப்பம் சாலையில் ½ மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சென்னை சென்ட்ரல் தபால் நிலையத்தின் மேற்கூரை இடிந்து விபத்து



சென்னை, மே.22

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே அல்லி குப்பம் தபால் நிலையம் செயல்பட்டு வருகிறது. தபால் நிலையம் அமைந்துள்ள கட்டிடத்தின் மேற்கூரை திடீரென்று இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் ஊழியர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் படுகாயம் அடைந்த தபால் நிலைய ஊழியர்களான ரகுபதி மற்றும் சிவா ஆகிய இருவரையும் அங்கு இருந்த மற்ற ஊழியர்கள் மீட்டு சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இந்த சம்பவத்தால் தபால் நிலையத்தில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ஒரத்துப்பாளையம் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



சென்னிமலை, மே. 22

ஒரத்துப்பாளையம் அணைக்கு கடந்த 10 நாட்களாக சுமார் 10 கன அடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. மிக குறைவான நீர் வரத்தாக இருந்ததால் அணையில் தண்ணீரை தேக்கி வைக்கப்படாமல் இருந்தது. பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை 91 கன அடியாகவும், புதன்கிழமை 40 கன அடியாகவும், பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 70 கன அடியாகவும் இருந்தது.

இந்த நிலையில் நீர்பிடிப்பு பகுதிகளான கோவை, திருப்பூர் மாவட்டங்களில் திடீரென பரவலான மழை பெய்ததால் நொய்யல் ஆறு வழியாக ஒரத்துப்பாளையம் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

நேற்று காலை 6 மணி நிலவரப்படி அணைக்கு 327 கன அடி நீர்வரத்து இருந்தது. அணைக்கு வரும் தண்ணீரை அப்படியே நொய்யல் ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இது குறித்து ஆற்றங்கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் கூறுகையில், நொய்யல் ஆற்றில் செல்லும் தண்ணீர் மிகவும் கருஞ்சிவப்பு நிறத்தில் உள்ளதால் திருப்பூர் பகுதியில் உள்ள சாயப்பட்டறைகளிலிருந்து சாய கழிவு நீரை மழை நீரோடு நொய்யல் ஆற்றில் திறந்து விட்டார்களோ என்ற சந்தேகம் உள்ளது. அதனால் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் திருப்பூர் பகுதியில் உள்ள சாயப்பட்டறைகளை கண்காணிக்க வேண்டும் என்றனர்.

# ஈரோடு மாவட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது

ஈரோடு: மே.22

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந்நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடந்த சில மாதங்களாகவே மழைப்பொழிவு இல்லாததால் அணைக்கு நீர்வரத்து குறைந்து வருகிறது. அதே நேரம் அணைக்கு வரும் நீர் வரத்தை விட பாசனத்திற்கு அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக ஈரோடு புறநகர் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்து வருகிறது. இதே போல் மற்ற அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இன்று காலை பவானிசாகர் அணைக்கு 762 கன அடி நீர் அதிகரித்து வந்தது. இன்று காலை நிலவரப்படி அணையின்நீர்மட்டம் 45.18 அடியாக உள்ளது. கீழ்பவானி வாய்க்கால்பாசனத்திற்கு 5கனஅடிநீர்திறக்கப்பட்டுள்ளது. குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 200 கனஅடி நீர் மட்டும் திறக்கப்பட்டு வருகிறது.

இதேபோல் 41.75 அடி கொள்ளளவு கொண்ட குண்டேரிபள்ளம் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 22.23 அடியாக உள்ளது. குண்டேரி பள்ளம் அணைப்பகுதியில் மழை பெய்து வருவதால் கடந்த இரண்டு நாட்களில் 3 அடி உயர்ந்துள்ளது. 33.45 அடி கொள்ளளவு கொண்ட வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 17.09 அடியாக உள்ளது. 30.84 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணை நீர்மட்டம் கடந்த ஒன்றரை மாதமாக முற்றிலும் வற்றிப் போய் உள்ளது. தொடர்ந்து அணைப்பகுதியில் மழை பெய்து வருவதால் நீர்மட்டமும் சற்று உயர்ந்து உள்ளது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் திடீரென நுழைந்து போக்குவரத்து போலீசார் அதிரடி




சென்னை, மே.22


சென்னையில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தங்கள் வாகனங்களில் ஊடகம், போலீஸ் என பல்வேறு துறைகளை சார்ந்த ஸ்டிக்கர்களை ஒட்டி தவறாக பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டு போலீசாரிடம் இருந்து எளிதாக தப்பி விடுகிறார்கள்.

எனவே தனியார் வாகனங்களில் அரசால் அங்கீகரிக்கப்படாத ஸ்டிக்கர்களை ஒட்டக்கூடாது. அவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டி இருப்பவர்கள் மே 1ந்தேதிக்குள் அதை அகற்ற வேண்டும். அப்படி அகற்றாமல் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு மோட்டார் வாகன சட்டத்தின் படி அபராதம் விதிக்கப்படும். மேலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்' என்று சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை அறிவித்து இருக்கிறது. மேலும், மே 1 ஆம் தேதி முதல் இதுபோன்ற ஸ்டிக்கர் ஒட்டிய வாகனங்களுக்கு அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் போலீசாரின் வாகனங்களில் உள்ள நம்பர் பிளேட்டுகளில் போலீஸ் என ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரை நீக்கி, வேப்பேரி போக்குவரத்து போலீசார் அபராதம் விதித்தனர். வாகனங்களில் உள்ள ஸ்டிக்கர்களை அகற்றும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

வேப்பரி போக்குவரத்து போலீசாரின் இந்த அதிரடி நடவடிக்கை சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 13 ஆண்டுகளுக்கு முன்பு மாயமான சிறுமியை ஏ.ஐ.தொழில்நுட்பம் மூலம் கண்டுபிடிக்க முயற்சி



சென்னை, மே. 22

செயற்கை நுண்ணறிவு என்று அழைக்கப்படும் ஏ.ஐ. தொழில்நுட்பம் பல்வேறு துறைகளிலும் இன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சென்னை காவல் துறையினர் கடந்த 2011ம் ஆண்டு மாயமான சிறுமி ஒருவரை ஏ.ஐ. தொழில் நுட்பம் மூலமாக கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை சாலி கிராமம் மஜித் நகர் பகுதியில் வசித்துவருபவர் கணேஷ். இவரது மகள் கவிதா 2 வயது குழந்தையாக இருந்தபோது கடந்த 2011ம் ஆண்டு காணாமல் போனார். இது தொடர்பாக விருகம்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான சிறுமியை தேடி வந்தனர். ஆனால் எந்த வித துப்பும் துலங்கவில்லை. இதனை தொடர்ந்து சிறுமியை கண்டுபிடிப்பதற்கு போலீசார் தற்போது ஏ.ஐ. தொழில் நுட்பத்தினை பயன்படுத்த தொடங்கி உள்ளனர்.

சிறுமி மாயமான வழக்கை தற்போது குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு போலீசார் விசாரித்து வருகிறார்கள். 2 வயதில் மாயமான சிறுமியின் புகைப்படத்தை வைத்து தற்போது 14 வயதில் வளர்ந்த பிறகு எப்படி இருப்பார் என்பதை ஏ.ஐ. தொழில் நுட்பத்தின் மூலமாக புகைப்படமாக உருவாக்கியுள்ளனர்.

இந்த 2 புகைப்படத்தையும் ஒன்றாக வைத்து போஸ்டர் அடித்து போலீசார் வெளியிட்டுள்ளனர். கவிதாவை பற்றி தகவல் தெரிந்தவர்கள் 9444415815, 9498179171 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றும் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர். போலீசார் இப்படி நவீன தொழில் நுட்பத்தின் உதவியோடு தனது மகளை தேட தொடங்கியுள்ள நிலையில், நிச்சயம் தனது மகள் திரும்ப வருவாள் என்கிற நம்பிக்கையோடு காத்திருக்கிறார் தந்தை கணேஷ். இதுபற்றி அவர் கூறும்போது, எங்கு சென்று குறி கேட்டாலும் மகள் திரும்ப கிடைத்து விடுவாள் என்றே சொல்கிறார்கள். அந்த நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து மகளுக்காக காத்திருக்கிறேன் என்றார்.

# காவல் நிலையத்தில் மக்களுக்கு உதவ வழக்கறிஞர்கள் விஜய் திட்டம்

சென்னை: மே. 22

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் விஜய் தனது அரசியல் பயணத்தை கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கினார்.

தொடர்ந்து கட்சியின் பெயரை புதுடெல்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தில் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் பதிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து கட்சிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்க்கை தீவிரமாக நடந்து வருகிறது. ஆன்லைனில் மட்டுமே புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதால் அதற்கான சிறப்பு செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை கட்சியில் சேர்ந்துள்ள புதிய உறுப்பினர்கள் எண்ணிக்கை 1 கோடியை நெருங்கி வருகிறது.

இந்நிலையில் மக்களுக்கு சட்ட உதவி வழங்க காவல் நிலையங்களை கணக்கிட்டு தலா 2 வழக்கறிஞர்களை நியமிக்க விஜய் திட்டமிட்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ஏற்கெனவே சட்ட ஆலோசனை மையம் செயல்பட்டு வரும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காவல் நிலையத்திற்கு செல்லும் பொதுமக்களுக்கு த.வெ.க. வழக்கறிஞர்கள் சட்ட உதவிகளை வழங்குவார்கள். வழக்கறிஞர்கள் நியமனத்தை இந்த வாரத்திற்குள் முடித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வாய்ப்பு உள்ளது.

# நாகை அருகே நள்ளிரவில் காரில் வந்து ஆடு திருடிய கும்பல்



நாகப்பட்டினம், மே.22

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பைக், லோடு வேன் மற்றும் சொகுசு கார்களில் வந்து ஆடுகளை மர்ம நபர்கள் திருடி செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் தெற்கு பொய்கைநல்லூர் வீட்டில் ஆடுகள் மேய்சலுக்கு கொண்டு சென்று பின்னர் ஆடுகளின் உரிமையாளர் வீட்டில் ஆடுகளை எல்லாம் கட்டி கவைத்து விட்டு, பின்னர் அவர் தூங்க சென்றார்.

நள்ளிரவு நேரத்தில் அங்கு ஒரு கார் வந்தது. அந்த காரில் இருந்து முன் பக்க கதவை திறந்து ஒருவர் வேகமாக கீழே இறங்கினார். அங்கிருந்த ஆடுகளில் ஒன்றை பிடித்து காரில் ஏற்றிக்கொண்டு கண்ணிமைக்கும் நேரத்தில் புறப்பட்டு சென்றார். இந்த காட்சிகள் அனைத்தும் அங்கிருந்த சி.சி. டி.வி. கேமராவில் பதிவாகி இருந்தது.

தற்போது இந்த காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி வருகிறது.

அதனை வைத்து தற்போது போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எனவே போலீசார் இரவு நேர ரோந்து பணியை துரிதப்படுத்தி இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபடும் மர்ம கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இருதரப்பினரிடையே மோதல் இளைஞர்களை கைது செய்ய எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல்

கடலூர், மே.22

கடலூர் முதுநகர் அருகே உள்ள சங்கொலிக்குப்பம் கிராமத்தில் திரவுபதி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் தீமிதி திருவிழா கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது. முதல் நாள் திருவிழாவின் போது சங்கொலிக்குப்பம் கிராமத்தை சேர்ந்த இரு தரப்பு இளைஞர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து இருதரப்பினரும் தனித்தனியாக அளித்த புகாரின் பேரில், கடலூர் முதுநகர் போலீசார் இருதரப்பை சேர்ந்த 10 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். அதில் ஒரு தரப்பை சேர்ந்த 3 வாலிபர்களை கைது செய்தனர்.

இந்நிலையில் மற்றொரு தரப்பை சேர்ந்தவர்களை கைது செய்வதற்காக கடலூர் முதுநகர் போலீசார், இன்று காலை சங்கொலிக்குப்பம் கிராமத்திற்கு சென்றனர். தகவல் அறிந்த அந்த பகுதி பொதுமக்கள், தங்கள் பகுதி இளைஞர்களை கைது செய்யக்கூடாது என்று கூறி போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும், ஊருக்குள் செல்ல முடியாமல் போலீசாரை தடுத்து நிறுத்தினர். தொடர்ந்து சங்கொலிக்குப்பம் பஸ் நிறுத்தம் அருகே சாலை மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் கடலூர்சிதம்பரம் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதுகுறித்து கடலூர் துணை போலீஸ் சூப்பிரண்டு பிரபு, இன்ஸ்பெக்டர் ரேவதி மற்றும் போலீசார் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது பொதுமக்கள் கூறுகையில், இதற்கு முன்பு நாங்கள் அளித்த பல்வேறு புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, தற்போது எங்கள் பகுதி இளைஞர்களை கைது செய்யக்கூடாது என்று கூறினர். அதற்கு துணை போலீஸ் சூப்பிரண்டு பிரபு, இது குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும். சாலை மறியலை கைவிட்டு கலைந்து செல்லுங்கள் என்று கூறினார். இதனையேற்ற பொதுமக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த மறியல் போராட்டத்தால் கடலூர்சிதம்பரம் சாலையில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## சர்வதேச திரைப்பட விழாவில் சூரியின் 'கொட்டுக்காளி'




சிவகார்த்திகேயன் நடிகராக மட்டுமில்லாமல் பாடல் பாடுவதிலும், பாடல் எழுதுவதிலும், படம் தயாரிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறார். இவர் கனா, நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா, வாழ், டாக்டர், டான் உள்ளிட்ட படங்களையும் தயாரித்துள்ளார்.

இவர் தற்போது தி லிட்டில் வேவ் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து 'கொட்டுக்காளி' என்ற திரைப்படத்தை தயாரித்துள்ளார்.

கூழாங்கல் திரைப்படத்தை இயக்கியிருந்த பி.எஸ். வினோத்ராஜ் இயக்கும் இப்படத்தில் சூரி மற்றும் மலையாள நடிகை அன்னா பென் இணைந்து முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கொட்டுக்காளி 74 வது பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட தேர்வாகியிருந்தது. ஒரு தமிழ்ப் படம் இந்த கௌரவத்தைப் பெறுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ருமேனியாவின் டிரான்ஸில்வேனியா சர்வதேசத் திரைப்பட விழாவிலும் இந்தப் படம் திரையிட தேர்வாகி இருக்கிறது.

பி.எஸ்.வினோத்ராஜ் இயக்கிய கூழாங்கல் திரைப்படமும் இந்த டிரான்ஸில்வேனியா சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பாலிவுட் நடிகை யாமி கவுதமிற்கு ஆண் குழந்தை 'வேதாவிட்' என பெயர் சூட்டி நெகிழ்ச்சி




தென்னிந்திய மொழிகளிலும், இந்தியிலும் யாமி கவுதம் நடித்து வருகிறார். இவர் தமிழில் கவுரவம், தமிழ்ச்செல்வனும் தனியார் அஞ்சலும் போன்ற படங்களில் நடித்துள்ளார்.

தற்போது இந்தியில் முன்னணி நடிகையாக உள்ள இவர் இந்தியில் யூரி சர்ஜிக்கல் ஸ்டிரைக் என்ற சூப்பர் ஹிட் படத்தை இயக்கிய ஆதித்யா தர்ரை கடந்த 2021 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

யூரி சர்ஜிக்கல் ஸ்டிரைக் படத்தில் யாமியும் நடித்திருந்தார். அப்போது இவர்களுக்குள் ஏற்பட்ட பழக்கம் காதலாக மாறி பின்னர் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றுள்ளது.


இந்த தம்பதிக்கு மே 10 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு வேதாவிட் என அவர்கள் பெயர்கள் வைத்துள்ளனர். இதனை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர். வேதாவிட் என்ற பெயருக்கு வேதங்களை நன்கு கற்றவன் என்று அர்த்தம்.

அக்ஷய திருதி என்ற நன்னாளில் எங்கள் குழந்தை பிறந்துள்ளது என்று யாமி கவுதம் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். இவர்களுக்கு பாலிவுட் நடிகர்களான ரன்வீர்சிங், ஆயுஷ்மான் குரானா, மிருனாள் தாக்கூர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## மிரட்டல் லுக்கில் அஜித்குமார் குட் பேட் அக்லி படத்தின் ஃபர்ஸ்ட் லுக்

மார்க் ஆண்டனி படத்தை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் குட் பேட் அக்லி என்ற படத்தில் சமீபத்தில் அஜித் குமார் கமிட்டாகி இருந்தார் . விடாமுயற்சி படத்தைத் தாண்டி குட் பேட் அக்லி படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. சமீபத்தில் படத்தின் டைட்டில் போஸ்டர் வெளியாகி வைரலானது. இப்படத்தில் நடிக்கும் பிற நடிகர்கள் யார் யார் என தெரிந்து கொள்ளும் ஆர்வம் ரசிகர்களிடையே தொற்றியுள்ளது. இந்நிலையில் குட் பேட்அக்லிபடத்தைக்குறித்துபுதியஅப்டேட்ஒன்றுவெளியாகியுள்ளது.படத்தின்ஃபர்ஸ்ட்லுக்கைவெளியிட்டுள்ளனர். இந்த போஸ்டரில்அஜித்மூன்று முகபாவனையை கொடுத்தபடியுள்ளார். ஒன்று சாந்தமாகவும், ஒன்று சிரித்துக்கொண்டும் மற்றொன்று கோவமாக முக பாவனையில் காணப்படுகிறார். மேஜையில் துப்பாக்கிகள் இடம் பெற்றுள்ளன. இந்த போஸ்டர் தற்பொழுது ரசிகர்களுக்கு விருந்து அலளிக்கும் வகையில் இருக்கிறது. தற்பொழுது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிரது. படத்தை புஷா திரைப்படத்தை தயாரித்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கின்றனர் மற்றும் தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கவுள்ளார். அதன்படி ஐதராபாத்தில் தொடங்கி நடைபெற்று வரும் இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு ஜூன் 6 ஆம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குட் பேட் அக்லி படம் 2025 ஆம் ஆண்டு பொங்கல் விருந்தாக வெளியாகும் என்று படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

## பிரபல நடிகை எதிரே வந்தும் கடமை தவறாத ஸ்விக்கி ஊழியருக்கு குவியும் பாராட்டு வைரலாகும் வீடியோ




பொதுவாக நம் ஊரில் திரைப் பிரபலங்கள் பொது இடங்களில்கண்டுவிட்டால்அவர்களைரசிகர்கள்சூழ்ந்துவிடுவது வழக்கம். சிலர் செல்பி என்ற பெயரில் அவர்களை நச்சரித்துவிடுவார்கள்.

நடிகர், நடிகைகள் என்றால் வாயடைத்து நிற்பவர்களுக்கு மத்தியில் தனக்கு கடமை தான் முக்கியம் என்று நடிகை எதிரே வந்தும் கண்டும் காணாமல் கடந்து தனது பணியை ஆற்றிய ஸ்விக்கி ஊழியருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள சலூன் ஒன்றுக்கு சென்றுவிட்டு நடிகை டாப்சி பன்னு வெளியே வந்தார். அவரிடம் பேட்டி எடுப்பதற்காக செய்தியாளர்கள், புகைப்பட கலைஞர்கள் என பலரும் வெளியே நின்று அவரை அழைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த ஸ்விக்கி ஊழியர் ஒருவர் உணவு டெலிவெரி செய்வதற்காக உள்ளே சென்றார். அப்போது, நடிகை டாப்சி ஸ்டைலிஷாக எதிரே வந்தார். ஆனாலும, ஸ்விக்கி ஊழியர் அவரை கண்டுக்கொள்ளாமல் தனது கடமையை செய்ய சென்றார்.

இந்த வீடியோ இணையதளத்தில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவை கண்ட நெட்டிசன்கள்," எவ்வளவு பெரிய நடிகை வந்தாலும் தனக்கு கடமை தான் முக்கியம் என்று தனது பணியை செய்யும் ஸ்விக்கி ஊழியருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும்" என பாராட்டி வருகின்றனர்.

23 வினாடிகள் கொண்ட இந்த வீடியோ காட்சியை, புகைப்பட கலைஞர் ஒருவர் ஸ்விக்கி பார்ட்னரை டேக் செய்து, ஸ்விக்கி ஊழியரின் கடமையை பாராட்டினார். அதில், "ஹே ஸ்விக்கி, இந்த டெலிவரி பார்ட்னர் தனது அர்ப்பணிப்புக்கு ஊக்கத்தொகைக்கு தகுதியானவர்" என குறிப்பிட்டார். இதற்கு பதிலளித்த ஸ்விக்கி, "தொந்தரவு இல்லை. நெஞ்சில் ஈரம், மகிழ்ச்சி. என் பாதை. கவனம் செலுத்துகிறது. செழிக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தது.

## பிரபாஸ் என்ன கேட்டாலும் செய்ய தயார் நடிகை பரபரப்பு பேட்டி



பாகுபலி படத்தின் மூலம் இந்திய அளவில் பிரபலமான நடிகராக திகழ்பவர் பிரபாஸ். சில தினங்களுக்கு முன்புஇன்ஸ்டாகிராமில்என்வாழ்க்கையில்அனைத்து செல்லங்களும் ஸ்பெஷல். காத்திருங்கள் என பதிவிட்டிருந்தார். இதை தொடர்ந்து பிரபாஸ் திருமணத்திற்கு தயாராகி விட்டார். அதைப்பற்றி தான் பேசப்போகிறார் என திரை உலகினர் மத்தியில் பரபரப்பு பற்றி கொண்டது.

இந்நிலையில் பிரபல நடிகையான பாயல் ராஜ்புத் பிரபாஸ் பற்றி கூறியதாவது: பிரபாசை எனக்கு மிகவும் பிடிக்கும். எல்லா ஞாயிற்றுக் கிழமைகளையும் தனித்தனியாக காதலிக்கிறேன். பிரபாசுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்ய விரும்புகிறேன்.



அவர் என்ன கேட்டாலும் நான் செய்ய வேண்டும். ராஜ்மா சாதம் எனக்கு மிகவும் பிடித்த உணவு. அந்த உணவை ஸ்பெஷலாக சமைத்து பிரபாசுக்கு என் கையால் ஊட்டுவேன். வாய்ப்பு கிடைத்தால் விட மாட்டேன். எல்லாம் என் கையால் செய்வேன் என்று கூறினார்.

பாயலின் கருத்து சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. பாயல் ராஜ்புத் ஆர்.எக்ஸ்.100 என்ற தனது முதல் படத்திலேயே எல்லையில்லாத கவர்ச்சியில் தைரியமாக நடித்து ரசிகர்களைகவர்ந்தார். ஆர்.எக்ஸ்.100 படத்தில் உதட்டுடன் உதடு முத்த காட்சியில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பணத்தை சாக்கடையில் வீசுகிறது ஆர்சிபி.. கேலி செய்தவர்களுக்கு பதிலடி கொடுத்த தயாள் தந்தை நெகிழ்ச்சி




ஐபிஎல்தொடரின்பிளேஆஃப்சுற்றுக்கு4வதுஅணியாக தகுதி பெற வேண்டிய நிலையில் ஆர்சிபி மற்றும் சிஎஸ்கே அணிகள் மோதின. முதலில் பேட்டிங் செய்த ஆர்சிபி 20 ஓவர்கள் முடிவில் 218 ரன்கள் எடுத்தது. இதன் பின்னர் பேட்டிங் செய்த சிஎஸ்கே வெற்றி பெற 219 ரன்கள் இலக்காக இருந்தாலும், 201 ரன்கள் எடுத்தாலே ப்ளே ஆஃப் சுற்றுக்கு செல்லலாம் என்ற நிலையில் விளையாடினர்.

கடைசி ஓவரில் சென்னை வெற்றி பெற 17 ரன்கள் தேவைப்பட்டபோது முதல் பந்தை டோனி சிக்சருக்கு பறக்கவிட்டார். இந்த பந்து ஸ்டேடியத்தை தாண்டி வெளியே சென்றதால், புதிய பந்து வழங்கப்பட்டது. அது பவுலிங்கிற்கு நன்றாக கைகொடுத்தால், அடுத்த பாலில் டோனி ஆட்டமிழந்தார். கடைசி 2 பந்துகளில் 10 ரன்கள் தேவைப்பட்டபோது, ரவிந்திர ஜடேஜாவால் 1 ரன் கூட எடுக்க முடியவில்லை.

அத்துடன் சென்னை அணியின் பிளே ஆஃப் கனவு முடிவுக்கு வந்தது. இந்த போட்டியில் ஆர்சிபிக்காக கடைசி ஓவரை வீசிய யஷ் தயாள ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தை பெற்றார். முதல் பந்தை டோனி சிக்சர் அடித்த பின்னர், அவர் பொறுமையாக மீதமுள்ள 5 பந்துகளையும் வீசிய விதம் பாராட்டை பெற்றது.

இதே யஷ் தயாள் தான், கடந்த முறை குஜராத் அணிக்காக விளையாடியபோது ஒரே ஓவரில் 5 சிக்சர்களை கொடுத்து அணியின் தோல்விக்கு காரணமாக இருந்தார். பின்னர் அவர் குஜராத் அணியால் விடுவிக்கப்பட்ட நிலையில் அவரை ரூ. 5 கோடி கொடுத்து ஆர்சிபி 2024 சீசனுக்காக வாங்கியது.

இந்நிலையில் தனது மகனின் மோசமான ஆட்டத்திற்காக முன்பு கேலி செய்தவர்கள், சென்னை அணியுடனான வெற்றிக்கு பின்னர் பாராட்டு தெரிவிப்பதாக, ஆர்சிபி பவுலர் யஷ் தயாளின் தந்தை நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.


யஷ் தயாள் குறித்து அவரது தந்தை கூறியதாவது

ஆர்சிபி யஷ் தயாளை ரூ.5 கோடிக்கு வாங்கியபோது, ஆர்சிபி தனது பணத்தை சாக்கடையில் வீணடித்ததாக ஒருவர் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. எல்லோரும் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் இன்று எனக்கு நிறைய நல்ல செய்திகளும் அழைப்புகளும் வருகின்றன.

முதல் பந்தில் டோனி சிக்சர் அடித்த பிறகு, அப்படியே கைகளை கூப்பி பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். கடவுளே, இன்று என் குழந்தைக்கு ஆதரவளிக்கவும், இது மீண்டும் நடக்கக்கூடாது என்று பிரார்த்தித்தேன்.

முதல் பந்திற்குப் பிறகு எனது மகன் பொறுமையைக் கடைப்பிடித்த விதம் எனக்குப் பிடித்திருந்தது. முன்பு கேலி செய்தவர்கள் இன்று என் மகனை பாராட்டுகிறார்கள். என்று அவர் கூறினார்.

## உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் உலக சாதனை படைத்த தீப்தி ஜீவன்ஜி




உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் 2024 போட்டி ஜப்பானில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தீப்தி ஜீவன்ஜி இந்தியாவுக்கு முதல்தங்கப்பதக்கத்தைவென்றுகொடுத்து அசத்தியுள்ளார்.

தீப்தி ஜீவன்ஜி பெண்களுக்கான 400 மீட்டர் டி20 பிரிவு பந்தயத்தில் 55.06 வினாடிகளில் ஓடி உலக சாதனை படைத்துள்ளார்.

இவரை தொடர்ந்து, துருக்கியின் அய்செல் ஒன்டர் 55.19 வினாடிகளுடன் இரண்டாவது இடத்தையும், ஈக்வடாரின் லிசான்ஷெலா அங்குலோ 56.68 வினாடிகளுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

முன்னதாக, இதற்காக தகுதி சுற்றின்போது தீப்தி ஜீவன்ஜி பெண்கள் 400 மீட்டர் டி20 ஹீட் பைனலுக்கு தகுதி பெற்றதன் மூலம் ஒரு புதிய ஆசிய சாதனையை 56.18 வினாடிகளில் எட்டி, 2024 பாரிஸ் பாராலிம்பிக்ஸுக்கு தகுதி பெற்றார்.

தீப்தி ஜீவன்ஜி, கடந்த 2023ம் ஆண்டு நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியிலும் பெண்களுக்கான 400 மீ டி20 போட்டியில் கலந்துகொண்டு தங்கப் பதக்கத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜஸ்தானை எலிமினேட்டரில் சுற்றில் ஆர்சிபி வீழ்த்தும் அம்பத்தி ராயுடு




17வது சீசன் ஐபிஎல் தொடரின் லீக் சுற்று போட்டிகள் நேற்றுடன் முடிவடைந்தது. லீக் சுற்றின் முடிவின் அடிப்படையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

இந்நிலையில் எலிமினேட்டர் சுற்றில் ஆர்சிபி அணி வெற்றி பெறும் என இந்திய அணியின் முன்னாள் வீரர் அம்பத்தி ராயுடு கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:

என்னைப் பொறுத்தவரை எலிமினேட்டர் சுற்றில் ஆர்சிபி அணி வெற்றிபெற அதிக வாய்ப்பு உள்ளது என நம்புகிறேன். ஏனெனில் சமீபத்தில் அவர்களின் செயல்பாடுகளை பார்க்கும் போது நிச்சயம் ஆர்சிபி அணிக்கான வெற்றி வாய்ப்பு தான் அதிகமாக உள்ளது. அதேசமயம் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியானது அடுத்தடுத்து நான்கு போட்டிகளில் தோல்வியைச் சந்தித்த கையோடு இப்போட்டியை எதிர்கொள்கிறது. மேலும் அவர்களுக்கு இருந்த கடைசி போட்டியும் மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது. இதனால் ஆர்சிபி அணிக்கு எதிரான எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் ஆர்சிபி அணியில் உள்ள ஒவ்வொரு வீரருக்கு தங்கள் பணி என்ன என்பது நன்றாக தெரியும். அவர்களும் அதனை சிறப்பாக செய்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு தான் வெற்றிக்கான வாய்ப்பு அதிகம். இவ்வாறு ராயுடு கூறினார்.

## தோல்விக்கு பிறகு சொந்த ஊரில் பைக் ரைடு செய்த டோனி வைரலாகும் வீடியோ




ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரில் சென்னை மற்றும் பெங்களூரு அணிகள் 18ந் தேதி நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற சென்னை அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 191 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது. இதனால் சென்னை அணி பிளே ஆஃப் சுற்றில் இருந்து வெளியேறியது.

இந்நிலையில் சிஎஸ்கே அணியில் இருந்து முன்னாள் கேப்டன் எம் எஸ் டோனி விடை பெற்றார். அவர் விமான நிலையத்தில் அதனை தொடர்ந்து அவரது சொந்த ஊரான ராஞ்சிக்கு சென்றார். அங்கு அவர் பைக்கில் சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

விளக்கம்:

( தீங்கு செய்தவரைப்) பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால், பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.